குற்றவியல் நீதித்துறை நடுவர், நீதிமன்றம், ஓமலூர்.
முன்னிலை: திருமதி.S.ஷர்மிளா, B.A.B.L.(Hons.), L.L.M.
குற்றவியல் நீதித்துறை நடுவர், ஓமலூர்.
சி.சி.எண். 164/2013

அ.சா.3

2024–ம் ஆண்டு செப்டம்பர் 10–ம் தேதி செவ்வாய்கிழமை அரசு தரப்பு சாட்சி 3–வது நபரின் வாக்குமூலம் (1969–ம் ஆண்டின் 54–வது விதியின் 9–வது பிரிவின் ஏற்பாட்டின் படி) திரு.ஆனந்தன் என்பவரின் ஆணையிட்டு உறுதிமொழி செய்விக்கப்பட்டு சத்திய பிரமாணம் செய்து வைக்கப்படுகிறது.

| | | | |
|---|---|---|---|
| பெயர் | சக்திவேல் | ஜாதி | |
| தந்தை பெயர் | வேலாயுதம் | தொழில் | |
| கிராமம் | | சமயம் | |
| தாலுக்கா | | வயது | |

விசாரணை தொடங்கிய நேரம்: மதியம் 12.57 மணி,

Accused Ganesan absent. Petition filed U/s. 317 CrPC filed and allowed. Advocate Mr.Sivakumar present for accused. APP Mr.P.Suresh present.

**முதல் விசாரணை:**

1. நான் ஓமலூநா ஜெயா தியேட்டர் அருகே குடியிருந்து கூலி வேலை செய்து வருகிறேன். அ.சா.2 மற்றும் எதிரியை எனக்கு தெரியாது. சுமார் 7 வருடங்களுக்கு முன்பு ஒரு நான் பாகல்பட்டி ஏரிக்கரை அருகே நான் சேலம் செல்வதற்காக பஸ் ஏறுவதற்காக நின்று கொண்டிருந்தேன். போலிசார் அங்கு வந்து என்னிடம் கையெழுத்து கேட்டார்கள். எதற்காக கையெழுத்து கேட்டார் என்று தெரியாது. கையெழுத்து போட்டேன். எனக்கு எந்த காயமும் ஏற்படவில்லை நான் மருத்துவமனை சென்று சிகிச்சை பெறவில்லை. இந்த வழக்கில் என்னை எதற்காக சாட்சியாக போட்டுள்ளார்கள் என்று எனக்கு தெரியவில்லை.

**( அரசு தரப்பு சாட்சியை பிறழ்சாட்சியாக கருதி அரசு தரப்பில் குறுக்கு விசாரணை செய்ய அனுமதிக்க கேட்டதின் பேரில் அனுமதி வழங்கப்பட்டு அரசு தரப்பில் குறுக்கு விசாரணை செய்யப்படுகிறார்)**

2. போலீசார் என்னை விசாரித்தார்கள் என்றும், அந்த விசாரணையில் அ.சா.2 தங்கவேலுவுக்கு என்பவருக்கு சொந்தமான KA 01 AD 4777 என்ற பதிவெண் கொண்ட டாரஸ் லாரியில் எதிரி கணேசன் ஓட்டுநராகவும் நான் கிளீனராகவும் வேலை

பார்த்து வந்ததாகவும் கடந்த 13.04.2013ம் தேதி காலை சுமார் 09.30 மணியளவில் முத்துநாயக்கன்பட்டியிலிருந்து சேலம் செல்லும் சாலையில் பாகல்பட்டி ஏரிக்கரை அருகே எதிரி கணேசன் மேற்படி லாரியை சேலம் நோக்கி ஓட்ட நானும் அ.சா.2 தங்கவேலு என்பவரும் லாரியின் உள்ளே அமர்ந்து பயணம் செய்த போது எதிரி கணேசன் மேற்படி லாரியை அதே வகமாகவும் அஜாக்கிரதையாகவும் ஓட்டிச் சென்று அதே சாலையில் TN 30 AB 4756 என்ற பதிவெண் கொண்ட Hero Honda என்ற இருசக்கர வாகனத்தில் இளங்கோ என்பவர் முன்னால் அமர்ந்து இருக்க அவருக்கு பின்னால் குணா (எ) கௌதம் என்பவர் உட்கார்ந்திருந்து சாலை ஓரமாக இருசக்கர வாகனத்தை நிறுத்தி பேசிக்கொண்டடிருந்த போது எதிரி கணேசன் லாரியை மோதி விபத்து ஏற்படுத்தி அந்த நபர்கள் மீது மேற்படி லாரி கவிழ்ந்து விபத்து ஏற்பட்டது என்றும் லாரி கவிழ்ந்ததில் எனக்கு கைவிரல்களில் உள் காயம் ஏற்பட்டது என்றும் அ.சா.2 தங்கவேலு என்பவருக்கு முதுகில் காயம் ஏற்பட்டது என்றும் கூறிவிட்டு தற்போது எதிரி என்னுடன் பணிசெய்தவர் மற்றும் எனது நண்பர் என்பதால் அவரை காப்பாற்றுவதற்காக பொய் சாட்சியம் அளிக்கிறேன் என்றால் சரியல்ல.

**எதிரிகள் தரப்பில் குறுக்கு விசாரணை.**

இல்லை.

**மறு விசாரணை : இல்லை**

விசாரணை முடிந்த நேரம்: மதியம் 01.11. மணி,

ஒம்/–ச.ஷர்மிளா.

குற்றவியல் நீதித்துறை நடுவர்,

ஓமலூர்.